இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 311 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 06 – புதன்கிழமை 21 ஜீன் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 311 : Thiruvalluvar Year - 2054 - Aani 06 - Wednesday 21 June 2023 - Madurai 16 Pages ₹ 5.00







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் நடைபெற்ற கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில், கபிலன், பா. விஜய், திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி, தஞ்சை இனியன் ஆகியோர் பங்கேற்ற கவியரங்கத்தை பார்வையிட்டார். உடன் முரசொலி செல்வம் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சான்றோர் பெருமக்கள் ஆகியோர் உள்ளனர்.

## கவியரங்கம் - பட்டிமன்றம் - பாட்டரங்கத்துடன் நூற்றாண்டு விழா கோலாகலமாக தொடங்கியது! திருவாரூரில்

# ‘கலைஞர் கோட்டம்’! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## நூலகத்தை பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் திறந்து வைத்தார்!
## அகன்ற நீண்ட பந்தலில் லட்சோபலட்சம் தமிழ் மக்கள் திரண்டனர்!

**திருவாரூர், ஜீன் 21-**

**திருவாரூரில் ‘கலைஞர் கோட்டம்’ திறப்பு விழா, நேற்று (ஜீன் 20) மிகப் பிரம்மாண்டமாக - கோலா கலமாக நடைபெற்றது. கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கலைஞர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்று, கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

**பீகார் மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், முத்துவேலர் நூலகத்தைத் திறந்து வைத்தார்.**

**விழாவில் - கவியரங்கம், பட்டிமன்றம், பாட்ட ரங்கம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.**

**இந்த உணர்ச்சிமிகு விழாவில், லட்சோப லட்ச தமிழ்ப் பெருங்குடி மக்கள் அகன்ற நீண்ட பந்தலே கொள்ளாத அளவிற்கு திரண்டிருந்தனர். திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறப்பு விழா நேற்று கோலாகலமாக தொடங்கியது.**

பல நூற்றாண்டுகளாக உரிமை மறுக்கப்பட்டிருந்த ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருந்த இனத்தின் மீட்சிக்கு ஓயாது உழைத்து, உரிமைகள் பலவற்றை மீட்டுத் தந்த மகத்தான தலைவர் - தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா எழுச்சியுடன் தொடங்கியுள்ளது.

நீதிக்கட்சியின் முன்னோடிகள் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் வளர்ந்த திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு காலத்தைக் கடந்த பங்களிப்புக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 95 வயது வரை வாழ்ந்த அவர், 80 ஆண்டுகால பொது வாழ்க்கையைக் கொண்ட பெருமைக்குரியவர்.

### சளைக்காத போராளியாகத் திகழ்ந்து நவீனத் தமிழ்நாட்டை கட்டமைத்த சிற்பி!

14 வயதில் பள்ளி மாணவராகத் தமிழ்க் கொடி ஏந்தி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஒலித்த அவரது போர்க்குரல், 80 வயது கடந்தும் சளைக்காமல் ஒலித்தது. திராவிட இயக்கத்தின் கொள்கை முழக்கங்களை படைப்புகள் வழியாகப் பாமர மக்களின் நெஞ்சிலும் பதியச் செய்தவர் அவர்.

‘உடன்பிறப்பே’ எனும் ஒற்றைச் சொல்லால் ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் இதயத்தில் இடம்பிடித்தவர் தமிழினத் தலைவர் கலைஞர். திருக்குவளை எனும் சிற்றூரில் பிறந்து, திருவாரூர் எனும் சிறு நகரத்தில் பயின்று, இளம் வயதிலேயே கொள்கை உணர்வுடன் வளர்ந்து, பன்முக ஆற்றலுடன் அனைத்துத் தளங்களிலும் அந்தக் கொள்கையை வளர்த்து, எவ்விதப் பின்னணியும் இல்லாத நிலையிலும், தன் அயராத உழைப்பால், கலை இலக்கியத் துறையிலும், பொது வாழ்விலும் உரிய இடத்தைப் பிடித்து, ஆட்சி செய்வதற்கு கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் தமிழ்நாட்டை உயர்த்திக்காட்டி, தமிழினத்திற்குப் பெருமை சேர்த்தவர் நம் தலைவர் கலைஞர். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வண்ணம், அவர்கள் பிறந்த திருவாரூரில் அழகிய ‘கோட்டம்’ ஒன்றை நிறுவிடும் வகையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழிலார்ந்த முறையில் திருவாரூர் காட்டூரில் “கலைஞர் கோட்டம்” அமைத்துக் கொடுத்தார்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.6.2023) திருவாரூர் மாவட்டம், காட்டூரில் நடைபெற்ற கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில், மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேச்சே! எழுத்தே! என்ற தலைப்பில் சாலமன் பாப்பையா அவர்களை நடுவராக கொண்ட பட்டிமன்றத்தை பார்வையிட்டார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சான்றோர் பெருமக்கள் ஆகியோர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றைப் போற்றும் வகையில் திருவாரூர் - காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள “கலைஞர் கோட்டம்” திறப்பு விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதிலுமிருந்து ஏராளமான கழகத்தினர், பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் திருவாரூக்கு கடந்த இரு தினங்களுக்கு முன்பே வருகை தந்தவண்ணமிருந்தனர்.

திருவாரூர், காட்டூர் வீதியெங்கும் கழகக் கொடி களாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு இரு தினங்களாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

தனது தந்தை, திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையை பறைசாற்றும் “கலைஞர் கோட்டம்” திறப்பு விழாவை முன்னிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவே திருவாரூர் வருகை தந்திருந்தார்!

மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க நாளில் அவர்கள் பிறந்த திருவாரூரில் “கலைஞர் கோட்டம்” திறப்பதென்பது சாலப்பொருத்தமாகும். கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னின்று “கலைஞர் கோட்டத்தை” உருவாக்கியுள்ளார்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலில் மிகுந்த எழிலோடு திருவாரூரில் உருவாகியுள்ள “கலைஞர் கோட்டத்தின்” திறப்பு விழா நேற்று (20.6.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் திருவாரூர் சகோதரிகளின் மங்கள இசையுடன் தொடங்கியது.

### கவியரங்கம் – பட்டிமன்றம் – பாட்டரங்கம்!

அதனைத் தொடர்ந்து - கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. இதில் - கவிஞர்கள் கபிலன், பா.விஜய், திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி, தஞ்சை இனியன் ஆகியோர் கவிபாடினர்.

> **தமிழ்நாட்டின் 80 ஆண்டு கால வரலாற்றினை தன்னகத்தே பெற்றிருந்த கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்த “கலைஞர் கோட்டம்” பிரதிபலித்துக் கொண்டிருக்கக்கூடிய வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்துள்ளார்!**

கவியரங்கை அடுத்து - தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களை நடுவராகக் கொண்டு, பட்டிமன்றம் நடைபெற்றது.

“மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்தது முத்தமிழறிஞர் கலைஞரின் பேச்சே! எழுத்தே!” எனும் தலைப்பிலான இப்பட்டிமன்றத்தில் - “பேச்சே!” எனும் தலைப்பில் திருவாரூர் புலவர் சண்முக வடிவேல், திருமதி கவிதா ஜவகர், எஸ்.ராஜா ஆகியோரும் - “எழுத்தே!” எனும் தலைப்பில், புலவர் எம்.ராமலிங்கம், இரா.மாது, திருமதி பாரதி பாஸ்கர் ஆகியோரும் வாதிட்டனர்.

பட்டிமன்றத்தை அடுத்து - கலைமாமணி மாலதி லஷ்மண் குழுவினரின் பாட்டரங்கம் நடைபெற்றது.

பாட்டரங்கினைத் தொடர்ந்து, விழாவில் - தயாளு அம்மாள் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் சிலை – முத்துவேலர் நூலகம் திறப்பு!

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் சிலையைத் திறந்து வைத்து, விழாத் தலைமையுரையாற்றினார்.

### வாத்திய இசை முழக்கத்துடன் கலைஞர் கோட்டம் திறப்பு!

வாத்திய இசை முழக்கத்துடன் “கலைஞர் கோட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், திருமதி செல்வி செல்வம் ஆகியோர் நேற்று திறந்து வைத்தனர்.

### அருங்காட்சியகம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் – முன்னணியினர் பார்வையிட்டனர்!

இதனைத் தொடர்ந்து கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட்ட முன்னணியினர் பார்வையிட்டனர்.

பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் அவர்கள், “முத்துவேலர் நூலகத்தை” திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

தயாளு அம்மாள் அறக்கட்டளையின் அறங்காவலர் சம்பத்குமார் நன்றியுரையாற்றினார்.

“இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் குடும்பத்தினர் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்து கொண்டனர். தமிழ்கூறு நல்லுலகினர் அனைவரும் விழாவிற்கு வருகை புரிந்து விழாவைச் சிறப்பித்தனர்.

### கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கும் ‘‘கலைஞர் கோட்டம்!’’

“கலைஞர் கோட்டம் என்பது கலைஞர் அவர்களின் வரலாற்றை பிரதிபலிக்கக்கூடிய ஒரு வரலாற்றுப் பெட்டகம்!

தமிழ்நாட்டின் 80 ஆண்டு கால வரலாற்றினை தன்னகத்தே பெற்றிருந்த கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்த “கலைஞர் கோட்டம்” பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது.

“கலைஞர் கோட்டம்” திறந்ததையடுத்து திருவாரூர் வருகை தந்திருந்த லட்சக் கணக்கானோர் கலைஞர் கோட்டத்தில் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கண்டுகளித்து பிரமித்தனர்! இந்தக் கலைஞர் கோட்டம் தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் கிடைத்ததோர் அரிய பொக்கிஷம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை என்றென்றும் நம் மனக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கும் வகையில் கலைஞர் கோட்டத்தை அமைத்துக் கொடுத்த கழகத் தலைவர் - முதல்வர் அவர்களுக்கே இந்தப் பெருமையெல்லாம் உரித்தாகும்!

“கலைஞர் கோட்டம்” திறப்பு விழாவினை முன்னிட்டு நடந்த இரு தினங்களாக திருவாரூர் - காட்டூர் பகுதியே எழுச்சியோடும், உணர்வோடும் விழாக் கோலம் பூண்டிருந்தது.

### திருவாரூர் – காட்டூர் பகுதிகள் மக்கள் தலைகளாகவே காட்சியளித்தன!

“கலைஞர் கோட்டம்” திறப்பு விழாவை முன்னிட்டு கடந்த இரு தினங்களாக (19,20ஆம் தேதி) திருவாரூர் வீதிகள் நெடுகிலும் கழகக் கொடிகளாலும், வண்ண வண்ண விளக்குகளாலும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் உருவங்கள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

### சாரை சாரையாக குவிந்த மக்கள்!

திருவாரூர் மாவட்டம் எங்கெங்கும் மக்கள் தலைகளாகவே காட்சியளித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர், வாழ்க! தமிழினத் தலைவர் கலைஞர் வாழ்க! முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்க! கழகத் தலைவர் தளபதி வாழ்க என்று வாழ்த்து முழக்கங்கள் முழங்கிய வண்ணமிருந்தன! “கலைஞர் கோட்டம்” உள்ளேயும், வெளியேயும் கழகத்தினர், பொதுமக்கள் லட்சக்கணக்கானோர் திரண்டதால் திருவாரூர் - காட்டூரே திணறியது!